DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, NANNILAM

| | | |
|---|---|---|
| Case No. | : | C.C No. 43/2025 |
| Deposition of witness | : | P.W – 1 |
| Name | : | கண்ணன் |
| Father's /Husband Name | : | கோவிந்தராஜ் |
| Village | : | நெம்மேலி |
| Taluk | : | நன்னிலம் |
| Age | : | 50 |
| Occupation | : | கோவில் காவலர் |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on 20th day of February 2025.

Accused present.

**முதல் விசாரணை:–**

ஆஜர் எதிரியை எனக்கு தெரியும். கடந்த 08.01.2025–ம் தேதி காலை சுமார் 07.30 மணியளவில் நான் எனது வீட்டிற்கு வந்துகொண்டிருந்தபோது ஆஜர் எதிரி என்னை பார்த்த குச்சிகாரி மகனே, தேவுடியா மகனே என அசிங்கமான வார்த்தைகளால் திட்டினார். அவ்வாறு எனக்கு திட்டியதல் எனக்கு அவமானம் ஆகிவிட்டது. ஆஜர் எதிரி கீழே கிடந்த மூங்கில் கம்பை எடுத்து வந்து எனது வலது கால் முட்டியில் அடித்தார். அதே மூங்கில் கம்பால் எனது தலையில் அடித்தார். அதே மூங்கில் கம்பால் எனது இரண்டு கைகளிலும் அடித்தார். அவ்வாறு எதிரி என்னை மூங்கில் கம்பால் எனது இடது கையில் அடித்ததில் எனது இடது கையில் உள்ள மூன்று விரல்களில் உள்ள எலும்பு முறிவு ஏற்பட்டது. வலது கை சுண்டு விரலில் பலத்த காயம் ஏற்பட்டது. அப்போது மனோகரன் என்பவர் என்னை காப்பாற்றினார். ஆஜர் எதிரி அங்கிருந்து செல்லும்போது அவரது குடும்ப விஷத்தில் தலையிட்டால் கொன்றுவிடுவதாக மிரட்டிவிட்டு சென்றார். அதனால் எனக்கு உயிர் பயம் ஏற்பட்டது. எனக்கு ஏற்பட்ட காயத்திற்காக நான் நன்னிலம் அரசு மருத்துமவனைக்கு சிகிச்சைக்கு சென்று அங்கு முதலுதவி சிகிச்சை பெற்று திருவாரூர் அரசு மருத்துவமனைக்கு சேர்ந்தேன். தற்போது என்னிடத்தில் காண்பிக்கப்படும் புகார் வாக்குமூலம் நான் கொடுத்தது தான். அந்த புகார் வாக்குமூலத்தில் நான் எனது எனது இடது கை பெருவிரல் ரேகை வைத்தேன். எனது இரண்டு கைகளிலும் காயம் இருந்ததால் கை ரேகை வைத்தேன். அந்த புகார் வாக்குமூலம் **அ.சா.ஆ.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது. நான் 19 நாட்கள் வரை திருவாரூர்அரசு மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்தேன். வீட்டில் 15 நாட்கள் கையில் கட்டுபோட்டு ஓய்வில் இருந்தேன். (சாட்சி அழுதுக்கொண்டு சாட்சியமளிக்கிறார்). எதிரி அடித்ததிலிருந்து எனது அன்றாட பணிகள் கூட நான் செய்யமுடியாமல் இருந்து வருகிறேன். காயமடைந்திருந்த சமயத்தில் எனது தனிப்பட்ட பணிகளை கூட எனது மனைவி தான்

செய்து கொடுத்தார். (சாட்சி அழுதுக்கொண்டே கைகளை மடக்கமுடியாமல் கண்ணீரை துடைக்க முடியாமலும் சாட்சியமளிக்கிறார்). எதிரி எனது ஆட்டுகுட்டிகளை குடிப்பதற்காக எடுத்து சென்று விற்றுவிட்டார். இவ்வாறு தினமும் தொல்லை கொடுத்து வருகிறார். அவரால் எனது பிள்ளைகளும் பயப்படுகிறார்கள். நான் மருத்துவமனையில் இருந்த போது என்னிடம் நான் கொடுத்த புகாரில் போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:–**

வழக்கறிஞர் ஆஜர். குறுக்கு விசாரணை இல்லை.

(ஒம். M.S. பாரதிதாசன்)
மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர், நன்னிலம்.

DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, NANNILAM

| | | |
|---|---|---|
| Case No. | : | C.C No. 43/2025 |
| Deposition of witness | : | P.W – 2 |
| Name | : | மனோகரன் |
| Father's /Husband Name | : | முருகேசன் |
| Village | : | நெம்மேலி |
| Taluk | : | நன்னிலம் |
| Age | : | 48 |
| Occupation | : | விவசாயம் |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on 20th day of February 2025.

Accused present.

**முதல் விசாரணை:–**

அ.சா.1 கண்ணன் மற்றும் ஆஜர் எதிரியை எனக்கு தெரியும். இவ்வழக்கு சம்பந்தமாக எனக்கு எதுவும் தெரியாது. போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

(அரசுத்தரப்பில் சாட்சியை பிறழ் சாட்சியாக கருதி அரசுத்தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரி அனுமதியளிக்கப்பட்டது)

**அரசுத்தரப்பில் குறுக்கு விசாரணை :**

கடந்த 08.01.2025–ம் தேதி காலை 07.30 மணியளவில் அ.சா.1 அவரது வீட்டு அருகே இருந்த போது அங்கு வந்த ஆஜர் எதிரி அ.சா.1–ஐ பார்த்து கெட்ட வார்த்தைகளால் திட்டினார் கீழே கிடந்த மூங்கிலால் அவரது கைகளில் அடித்து காயத்தை ஏற்படுத்தினார் என்றும், கொலை மிரட்டல் விடுத்தார் என்றும், சம்பவத்தை நான் நேரில் பார்த்தேன் என்றும், போலிசார் விசாரித்தார்கள் என்றும் சொல்லிவிட்டு தற்போது எதிரிக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:–**

வழக்கறிஞர் ஆஜர். குறுக்கு விசாரணை இல்லை.

(ஓம். M.S. பாரதிதாசன்)
மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர், நன்னிலம்.

DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, NANNILAM

| | | |
|---|---|---|
| Case No. | : | C.C No. 43/2025 |
| Deposition of witness | : | P.W – 3 |
| Name | : | சிவக்குமார் |
| Father's /Husband Name | : | பன்னீர்செல்வம் |
| Village | : | நரிக்குடி |
| Taluk | : | நன்னிலம் |
| Age | : | 45 |
| Occupation | : | கொத்தனார் |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on 20th day of February 2025.

Accused present.

**முதல் விசாரணை:–**

அ.சா.1, அ.சா.2 மற்றும் ஆஜர் எதிரியை எனக்கு தெரியும். இவ்வழக்கு சம்பந்தமாக எனக்கு எதுவும் தெரியாது. போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

(அரசுத்தரப்பில் சாட்சியை பிறழ் சாட்சியாக கருதி அரசுத்தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரி அனுமதியளிக்கப்பட்டது)

**அரசுத்தரப்பில் குறுக்கு விசாரணை :**

கடந்த 08.01.2025–ம் தேதி காலை 07.30 மணியளவில் அ.சா.1 அவரது வீட்டு அருகே இருந்த போது அங்கு வந்த ஆஜர் எதிரி அ.சா.1–ஐ பார்த்து கெட்ட வார்த்தைகளால் திட்டினார் கீழே கிடந்த மூங்கிலால் அவரது கைகளில் அடித்து காயத்தை ஏற்படுத்தினார் என்றும், கொலை மிரட்டல் விடுத்தார் என்றும், சம்பவத்தை நான் நேரில் பார்த்தேன் என்றும், போலிசார் விசாரித்தார்கள் என்றும் சொல்லிவிட்டு தற்போது எதிரிக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:–**

வழக்கறிஞர் ஆஜர். குறுக்கு விசாரணை இல்லை.

(ஒம். M.S. பாரதிதாசன்)
மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர், நன்னிலம்.